**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, THANJAVUR.**

**C.C.No. 178 /2024**
**U/s. 294(b),506(2) of IPC**
**PROSECUTION WITNESS NO. 1 (LW. 1 )**

| | |
|---|---|
| **Name** : சுரேஷ்பாபு | |
| **Father's/Husband Name :** | **Occupation :** |
| **Address** : | **Age : /2025** |

எதிரி ஆஜர்.

**என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது திருமதி. நித்யா, பெஞ்ச் கிளார்க் , செல்வி, வி, சௌந்தர்யா , தட்டச்சர்.**

**C.C.No.178 /2024 19.11.2025 விசாரணை ஆரம்பிக்கும் நேரம்: 12.50**

**முதல் விசாரணை:**

நான் தற்போது தஞ்சாவூர் கரந்தை கீழ வெள்ளார் தெருவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி கணேசன் என்பவரை தெரியும். கடந்த ஆகஸ்ட் மாதம் 2022 வருடம் குடும்ப சூழ்நிலை காரணமாக ரூ'. 60,000/− கணேசன் என்பவரிடம் கடனாக பெற்றேன். அதற்கு வட்டி 2% என்று என்னிடம் சொன்னார். நான் ஒரு வருட காலமாக வட்டி மற்றும் அசல் தொகையும் செலுத்ததால் கடந்த 09.04.2023 ம் தேதி காலை 9.00 மணியளவில் கணேசன் என்பவரிடம் வாங்கிய கடன் தொகையை திருப்பி கொடுக்க கீழராஜவீதி ஓம் சக்தி பிரிண்டர்ஸ் அருகில் சென்றேன். எனது மனைவி கலைவாணி பேரில் உள்ள நில அசல் பத்திரத்தை கணேசன் என்பவரிடம் திருப்பி கேட்டேன். அதற்கு கணேசன் அசல் பத்திரத்தை அறிவழகன் என்பவரிடம் கொடுத்திருக்கிறேன் என்று சொன்னார். கணேசன் அறிவழகனை சக்தி பிரிண்ட்ர்ஸ் வர சொன்னார். அப்போது கணேசன் மற்றும் அறிவழகன் ஒரு நாளைக்கு ரூ. 6000/− என கந்து வட்டி என கணக்கிட்டு ரூ. 9,40,000/− அசல் தொகையான ரூ. 60,000/− ஆக மொத்தம் ரூ. 10,00,000/− என்னிடம் கேட்டார்கள். அப்போது அசல் பத்திரத்தை திருப்பி கொடுக்கமுடியாது என அருவருக்கதக்க வார்த்தையால் என்னை திட்டினார்கள். நான் காவல்நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. **1 வது எதிரி** அறிவழகன் என்பவரை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அவருக்கும் எனக்கும் நேரடியாக பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை

என்றால் சரிதான். 2 வது எதிரிக்கும் எனக்கும் தான் பணம் கொடுக்கல் வாங்கல் இருந்தது என்றால் சரிதான். 1 வது எதிரி எனது மனைவி மீதும், 2 வது எதிரி மனைவி மீதும் முதன்மை சார்பு நீதிமன்றம் தஞ்சாவூர் அசல் வழக்கு எண் 429/2023 வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அது குறித்து தெரியாது. மேற்படி வழக்கில் எனது மனைவி மற்றும் 2 வது எதிரியின் மனைவி ஒரு தலைப்பட்சமாகபட்டார்கள் என்றவுடன் நான் எதிரிகள் மீது பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 09.04.2023 ம் தேதி காலை 10.00 மணியளவில் என்னுடன் எதிரிகள் வீட்டிற்கு பணம் கேட்பதற்காக யார் யார் வந்தார்கள் என்றால் நானும், சுரேஷ்ம் சென்றோம். இது குறித்து போலீசார் விசாரணையிலும் எனது புகாரிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1 வது எதிரிக்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

2. 1 வது எதிரி முறையாக உரிமம் பெற்றுதான் பணம் கொடுக்கல் வாங்கல் தொழில் செய்து வருகிறார் என்றாலும் அவரது நற்பெயரை கெடுக்க வேண்டும் என்பதற்காக நான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கும் 2 வது எதிரிக்கும் ஏற்கனவே பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பழக்கம் உள்ளது என்றால் சரிதான். 2 வது எதிரியும் நானும் சேர்ந்து பொய்யாக 1 வது எதிரி மீது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 2 வது எனது நண்பர் என்றாலும் நான் வழக்கிற்காக அவரை 2 வது எதிரியாக காண்பித்து 1 வது எதிரியிடமிருந்து பணம் பெறுவதற்காக பொய் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 1 வது எதிரி என்னிடம் எனது மனைவி கையெழுத்து செய்த பத்திரம் தன்னிடம் உள்ளதாக கூறினாரா என்றால் வாய்மொழியாக சொன்னார் பத்திரம் எதுவும் காண்பிக்கவில்லை. 1 வது எதிரி என்னிடம் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்தஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

<u>**2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. 2 வது கணேசனிடம் பணம் கேட்பதற்காக நானும் எனது மனைவியும் அவரது வீட்டிற்கு சென்றோம் என்றால் சரியல்ல. சம்பவ தேதியில் நான் எனது மனைவியின் பெயரில் உள்ள பத்திரத்தை 2 வது எதிரி மூலமாக அடமானம் வைத்து 1 வது எதிரியிடமிருந்து பணம் பெற்று என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் எதிரியிடமிருந்து ரூ. 60,000/- மட்டும் தான் வாங்கினேன் என்பதற்கு ஆவணம் ஏதேனும் எழுதி வாங்கவும் இல்லை எழுதி கொடுக்கவும் இல்லை என்றால் சரிதான். நான் பணத்தை திருப்பி கொடுக்கபோகும் சமயத்தில் ஆவணம் எதுவும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. நான் பணம்

வாங்கியதற்கு வட்டி கணக்கை கொடுத்தார்களா என்றால் இல்லை. என்னிடம் பணம்கூடுதலாக கேட்டது 1 வது எதிரி என்றால் சரிதான். அந்த சமயத்தில் எனது மனைவியின் பெயரில் உள்ள பத்திரம் 1 வது எதிரியிடம் இருந்தது என்றால் சரிதான்.

2. அந்த கடன் சம்மந்தமாக எனது மனைவி கையெழுத்து செய்த ஆவணம் எதுவும் 1 வது எதிரியிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. 2 வது எதிரி எனது நண்பர் என்பதால் எனக்கு அவர் பணம் வாங்கி கொடுத்தார் என்றாலும் நான் அவரை பழிவாங்கும் விதமாக இந்த வழக்கில் அவரை எதிரியாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரி எனக்கு பணம் தரவேண்டியது இல்லை என்றாலும் என்னிடம் கூடுதலாக வட்டி எதுவும் கேட்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னை ஆபாசமாக திட்டியதும் கொலை மிரட்டல் செய்ததும், 1 வது எதிரி என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் கொடுக்க நான் சென்றபோது 2 வது எதிரியும் உடன் வந்தார் என்றால் இல்லை. இந்த வழக்கில் முதல் புகாரை மேற்கு காவல்நிலையத்தில் கொடுத்தேன். எப்போது கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

இத்துடன் குறுக்கு விசாரணை முழுமையாக நிறைவு பெற்றது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கையெழுத்து செய்தார்.

**ஒப்பம்**- S.T. **கனிமொழி**.,L.L.M.,
நீதித்துறை நடுவர் எண்–I,
தஞ்சாவூர்.